இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 13 | திகதி : 21.08.2022 | விலை : 50.00

# நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஆற்றல் தற்கால மாணவர்களுக்கு அவசியமானது

## புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் துணை ஆயர் அன்ரன் இரஞ்சித் ஆண்டகை




யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 16.08.2022 அன்று நடைபெற்றபோது பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் இரஞ்சித் ஆண்டகை தமது பிரதம விருந்தினர் உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தமது பிரதம விருந்தினர் உரையில் குறிப்பிட்டதாவது :

கோவிட் -19 பெருந்தொற்றுக் காலத்தில் பெரும் நெருக்கடிகளை எம் சமூகம் சந்தித்தது குறிப்பாக மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதித்தது. நிகழ்நிலைக் (Zoom) கல்வி முறை பெரும் வெற்றியைத் தரவில்லை. எல்லா மாணவர்களுக்கும் கணனி வசதியோ, இணையப் பயன்பாட்டு வசதியோ கிட்டாமையே அம்முறையின் தோல்விக்குக் காரணமாயிற்று.


தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் எம் கல்விச் சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நிற்கின்றது. நெருக்கடிகளைத் தொடர்ந்து நெருக்கடிகளாக எம் சமூகம் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றது.

எனவே இன்றைய மாணவர் சமூகமானது தாம் சந்திக்கின்ற நெருக்கடிகளுக்கு உடனுக்குடன் தீர்வைக் காணப் பழகிக்கொள்ள வேண்டும். தீர்வைப் பெறுவதற்கு உரிய நேரத்தில் உரிய மனிதர்களின் உதவியைப் பெறவேண்டும். இவ் வாழ்வின் முறைமையே எதிர்காலத்தில் மாணவர்களாகிய உங்களை எம் நாட்டின் நற்பிரஜைகளாக்கும் எனத் துணை ஆயர் தம் பிரதம விருந்தினர் உரையில் குறிப்பிட்டார்.

யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக வைத்தியக்கலாநிதி A.J. தனேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இப் பரிசளிப்பு விழாவின் அனைத்து நிகழ்வுகளையும் கல்லூரி அதிபர் அருட்பணி திருமகன் அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## கப்பலேந்திமாதா ஆலயம் கட்டைக்காட்டில் திறந்துவைப்பு



கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலயம் கடந்த 15.08.2022 அன்று யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. அருட்தந்தையர்கள் ம.ஜேசுரட்ணம், தி. அ. மக் டொனால்ட், அ. அன்ரோ டெனீசியஸ், அ.அ.அமலராஜ் அடிகளார்களின் பணிக்காலத்தில் பங்குமக்களின் அர்ப்பணிப்பு மிக்க உதவியுடன் கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

## புதுப் பொலிவுடன் அந்திரான் புனித வேளாங்கண்ணி ஆலயம்



இளவாலை மறைக்கோட்டத்திற்குட்பட்ட மல்வம் பங்கில் அமைந்துள்ள அந்திரான் புனித வேளாங்கண்ணி ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 07ஆம் திகதி யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாலயத்திற்கான அடிக்கல் யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரால் கடந்த வருடம் தைமாதம் நாட்டப்பட்டதுடன் பங்குத் தந்தை அருட்திரு லீயோ ஆம்ஸ்ரோங் அடிகளின் வழிகாட்டலில் உள்நாட்டு வெளிநாட்டு மக்களின் நிதியுதவியுடன் அழகிய தோற்றத்துடன் இவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## "பிரிவினைகளைக் களைந்து கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிப்போம்" நெடுந்தீவில் யாழ் ஆயர்



நாம் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் எம் மிடமுள்ள பிரிவினைகளைக் களைந்து கூட்டொருங்கியக்கத் திருஅவையாக இணைந்து பயணிப்போமென யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நெடுந்தீவுப் பங்கிலுள்ள 140 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் திருச்சடங்கு மறையுரையில் தெரிவித்துள்ளார்.

சுயநலப்போக்கு, போட்டி மனப்பான்மை, பரம்பரை ஆதிக்கம், அழிவுப் பாதையில் இட்டுச்செல்லும் என்பதனைச் சுட்டிக்காட்டி இவற்றைத் தவிர்த்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் அழைப்பு விடுத்தார். நெடுந்தீவுப் பங்கிலுள்ள பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்திரு விமலசேகரன் அடிகளின் ஏற்பாட்டில் நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது.

## சின்ன மடு புனித செபமாலை அன்னை ஆலயத் திருவிழா



யாழ். தீவக மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள சின்ன மடு புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

திருவிழாவிற்கு முதல் நாள் நற்கருணை விழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி நிறைவேற்றினார்.

அன்னையின் திருவிழாவிற்கான நவநாள் வழிபாடுகள் கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்ததுடன் திருநாள் திருப்பலியில் யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இருந்து யாத்திரிகர்கள் வருகை தந்து அன்னையின் ஆசீரைப் பெற்றுக்கொண்டனர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு வருமா?

கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதியா-கப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளிடம் இருந்து தொடர்ச்சியாகப் பெருமளவு நிதியுதவி-களைப் பெறக்கூடிய சூழல் அருகிக் கொண்டே செல்கின்றது.

ரஷ்ய - உக்ரைன் போரினால், தற்போது பொரு ளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சர்வதேச நாடுகள் குறிப்பாக ரசியாவுக்கு எதிரான நாடுகள் உக்ரெய்ன் நாட்டை எப்படி மீளக் கட்டியெழுப்புவது என்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன. ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு உதவிய ளிப்பதிலும் இந்த நாடுகளில் கவனம் அதிகரித்துள்ளது.

ரஷ்யாவைப் பலவீனமாக்க வேண்டுமென்ற புவிசார் அரசியல் போட்டியே இதற்குக் காரணம் எனலாம். உக்ரெய்ன், இலங்கைபோன்று பொருளாதார அபிவிருத்தியடையாத நாடு அல்ல. பணவீக்கம் அளவுக்கு அதிகமாக உயருகின்ற நாடும் அல்ல. ஆனால் ரஷ்யா போர் தொடுத்த பின்னரான சூழலில் உக்ரெய்ன் பல வழிகளிலும் அழிவடைந்துள்ளது.

இதனால் உக்ரைன் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கில் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் தற்போது திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன. பெருமளவு நிதிகளையும் இந்த நாடுகள் ஒதுக்குகின்றன. ஜி-7 மாநாட்டில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் அந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டிலும் உக்ரெய்னுக்கு உதவியளிப்பது குறித்துத் தொடர்ச்சியாகப் பேசப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இலங்கையில் கடந்த மார்ச் மாதம் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. தற்போதும் பொரு ளாதார நெருக்கடி தொடருவதால், இலங்கைக்கு நிதியுதவி வழங்க வேண்டுமென ஆரம்பத்தில் பரிந்துரைத்த ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள், தற்போது இலங்கையின் ஸ்திரமற்ற அரசியல் நிலமைகளைக் காரணம் கூறி நிதி வழங்குவதை இழுத்தடிக்கின்றன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை தமக்கேற்றவாறு முக்கியமான தளமாக இருக்க வேண்டு மென்பதே அமெரிக்கா - இந்தியா போன்ற நாடுகளின் நீண்டகால விருப்பம். அதற்காகவே 2009 இல் ஈழப்போராட்ட மும் இல்லாதொழிக்கப்பட்டது.

அதன் பின்னரான சூழலில், சீனாவைக் கண் காணிப்பதற்காக அமெரிக்காவினால் 2017 இல் மீளக் கட்டமைக்கப்பட்ட குவாட் அமைப்புக்கு இலங்கை எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற விடயங்கள் பற்றியும் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டும் வந்தன.

அதாவது இலங்கையின் பொருளாதாரப் பலவீனங் கள் சீனாவுக்கான தளமாக மாறிவிடும் என்ற அச்சம் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இருந்தன. இதன் காரண-மாகவே இலங்கை மீது கூடுதல் கரிசனை கொண்டு பெரு மளவு நிதிகளும் வழங்கப்பட்டு வந்தன. பொருளாதார நெருக் கடி ஏற்பட்டபோது இந்தியா சுமார் நான்கு பில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் பெருமளவு நிதியை வழங்கியதுடன் எதிர்காலத்திலும் நிதி வழங்குவது தொடர்பான அதி-காரிகள் மட்டத்திலான பேச்சுக்களை இலங்கையோடு நடத்தியிருந்தன.

இந்த நிலையிலேயே இலங்கைக்குத் தொடர்ச்சியாக நிதி வழங்குவது குறித்த சிக்கல் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ளது. உக்ரெய்ன் மீது அதிக கவனம் செலுத்த வேண்டுமென ஒரு மாதத்திற்கு முன்னர் ஜி-7 நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும் முடிவெடுத்திருந்தன. அத்துடன் ரஷ்யாவுக்கு எதிரான போருக்காக உக்ரெய்ன் இராணுவத்துக்குப் பெருமளவு இராணுவத் தளபாடங்கள், தொழில் நுட்ப உதவிகளை மறைமுகமாக வழங்க வேண்டிய அவசியமும் உண்டு.

இந்த நிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் திட்டங்களில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதைச் சர்வதேச செய்தி ஊடகங்கள் மூலமாக அறிய முடிகிறது. இந்நிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கிட்டுமா என்பது கேள்விக்குறியாகவே இன்றும் உள்ளது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவும் தற்போது அமெரிக்காவில் பணியாற்றி வந்தவருமான **அருட்பணி மைக்கல் பற்றிக்** அவர்கள் கடந்த 04.08.2022 அன்று இறை பதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் தாயார், சகோதரங்கள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அடிகளாரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ். மாகாண அமலமரித் தியாகிகள் துறவற சபையைச் சேர்ந்த அருட்திரு அமலதாஸ் அவர்களின் தந்தை **தொம்மை அருள்ராசா** அவர்கள் கடந்த 28.07.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## புனித வளன் கத்தோலிக்க அச்சக முன்னாள் லிகிதர் திருமதி மேரி கொன்செப்ரா காலமானார்



நீண்டகாலமாக புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் லிகிதராகப் பணிபுரிந்த **திருமதி மேரி கொன்செப்ரா குனேந்திரன்** அவர்கள் கடந்த 05.08.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அன்புக் கணவருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அன்னாரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## சின்னமடு புனித செபமாலை அன்னை ஆலய திருவிழா

யாழ். தீவக மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள சின்ன மடு புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா இம் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றது.

அன்னையின் திருநாள் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருவிழாவிற்கு வருகை தந்த அன்னையின் பக்தர்களுக்கான போக்குவரத்து வசதிகளை சின்னமடு யாத்திரைத்தல பரிபாலகர் அருட்திரு அஜந்தன் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார். காலை 5.30 மணியில் இருந்து யாழ் பேருந்து நிலையத்திலிருந்தும் தீவகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உரும்பிராய் பங்கில் சலேசியன் துறவற சபையினரின் 150வது ஆண்டு நிறைவு தினம்

உரும்பிராய்ப் பங்கில் பணியாற்றிவரும் சலேசியன் துறவற சபையைச் சேர்ந்த அருட் சகோ தரிகள் தமது சபை உலகில் ஆரம்பிக்கப்பட்டதன் 150ஆவது ஆண்டு நிறைவு தினத்தை நினைவு கூர்ந்து முன்னெடுத்த சிறப்பு நிகழ்வு இம் மாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு அருட்செல்வன் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு இந்நாள் நிகழ்வுகள் அங்கு முன்னெடுக் கப்பட்டன. புனித டொன்பொஸ்கோ அவர்கள் 1872 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் திகதி பெண்களுக்கான ஒரு துறவற சபையை புனித மரிய மசறெல்லோவின் துணையுடன் ஆரம்பித்தார்.

இச்சபை ஆரம்பிக்கப்பட்டதன் 150 வது ஆண்டு நிறைவு தினத்தை உலகெங்கும் வாழும் இச்சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் இந்நாளில் சிறப்பித்தார்கள்.

## மண்டைதீவுப் பங்கில் இறைமீட்பர் சபையினருக்கான மாடிக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது

மண்டைதீவுப் பங்கில் பணியாற்றி வரும் இறைமீட்பர் சபை அருட்சகோதரிகளின் கன்னியர் மட கட்டடத்தின் முதலாவது மாடிக்கான கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக் கட்டடம் 06 ஆம் திகதி கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருடபணி ப.யோ. ஜெபரட்ணம் அவர்கள் இக்கட்ட டத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் கீழ்தளம் சென்றவருடம் யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்களினால் திறந்துவைக்கப் பட்டிருந்ததுடன் தற்போது திறந்துவைக்கப்பட்டுள்ள மேல்த்தளம் அருட்சகோதரிகளின் தேவைக்காக வும் பிள்ளைகளின் ஆன்மீக ஆளுமை வளர்ச்சிக் காகவும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது



குமுழமுனைப் பங்கில் கடந்த 29.05.2022 அன்று அருட்பணி நிதர்சன் அடிகளா-ரின் ஏற்பாட்டில் செபமாலைப் பேரணி நடைபெற்றது. இதில் பங்குமக்கள் அனைவரும் பக்திபூர்வமாகக் கலந்து செபித்தனர்.

# "கனவு காண்போம்"

கரைவையூர்ச் செல்வம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**குழப்பம்**

ஒற்றுமைக்கும் (Unity) ஒருமைப்படுத்தலுக்கும் (Un for unity) இடையே ஒரு குழப்பம் உண்டு. சொல்லளவிலும் கருத்தளவிலும் குழப்பம் இல்லை. ஆனால், நடைமுறையில்தான் குழப்பம் உண்டு. புரியாத் தன்மை ஒரு காரணமாக இருப்பினும், பயமும், பாதுகாப்பின்மையும் (unsecurity), அடக்கி ஆள வேண்டுமென்ற அதிகாரப் பிரச்சினைகளும் ஏனைய காரணங்களாகும். இக் குழப்பம் பரவலாகவே உண்டு; அரசியலில் உண்டு; மதத்தில் உண்டு; பல்கலைக்கழகங்களிலும் உண்டு.

இந்த நாட்டு அரசியல் கொள்கைகளில் ஒன்றைப் பார்ப்போம். "ஒரு மதம், ஒரு மொழி, ஒரு கொடி" என்ற அரசியல் கொள்கை இச் சிறுநாட்டை ஒற்றுமைப்படுத்தாது, பிளவுகளையே கொண்டு வரும், கொண்டு வந்துள்ளது. இன்று இந்த நாடு ஒரு பொருளாதார வறுமைக்கு வந்தமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ஆயினும், இன்று களத்தில் உள்ள சிங்கள அரசியல் வாதிகளுக்கோ, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கோ இந்த யதார்த்தம் புரிந்ததாகத் தெரியவில்லை. இன்னமும் இனத்துவேஷம் கேட்காமல் இல்லை. சுடலை ஞானம் கூட இவர்களுக்குக் கிடைக்காதா?

**திணிப்பில் எதிர்ப்பு**

"ஒரு மதம், ஒரு மொழி, ஒரு கொடி" என்ற கொள்கையில் ஓர் இனத்துவேஷம் மறைந்திருக்கிறது. இந்தக் கொள்கை ஒருமைப்படுத்தலாகத் தோற்றலாம். அது ஒரு மாயை. பல மொழிகள் பேசும், பல மதங்களைப் பின்பற்றும் மக்களிடையே ஒருமைப்படுத்தல் ஓர் ஒற்றுமையைக் கொண்டு வராது. ஒருருப்படுத்தலில் ஒரு திணிப்பு அன்றேல் ஒரு கட்டாயப்படுத்தல் நடைபெற வழியுண்டு. இது, அடைப்படை வாதத்திற்கும் வழிகோலலாம்.

ஒரு மதத்தை, ஒரு மொழியை, ஓர் இனத்தை இன்னோர் இனத்தினர் மேலோ, ஒரு மொழியை இன்னோர் மொழி பேசுவோர் மேலோ, ஒரு மதத்தை வேறோர் மதத்தை வழிபடுபவர் மேலோ திணிக்கும் பொழுது, எதிர்ப்புத் தோன்றத் தான் செய்யும். இந்த எதிர்ப்பு வன்செயலுக்கு வழிவகுக்கும். இப்படிப்பட்ட வன்செயல்களை இந்த நாடு மீண்டும் மீண்டும் அனுபவித்தே வந்துள்ளது. இறுதியாக மூன்று சகாப்தப் போருக்கு இந்த நாட்டை எடுத்துச் சென்றுள்ளது. ஆயினும், தமிழர்களோ சிங்களவர்களோ இந்த நாட்டில் நடைபெற்ற போரில் இருந்து எதையுமே கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. பரிதாபமான நிலை.

இனவெறி, மதவெறி, மொழி வெறி போன்ற திணிப்புகளால் ஏற்பட்ட போர்கள் உலக வரலாற்றை நிரப்பி உள்ளன. கற்றுக்கொண்டோமா?

**இந்தியா உடையும்**

"இந்துக்களுக்கு மட்டுமே இந்தியா" என்ற ஒரு மதக் கோஷம் வலுப்பெறுமானால், இந்தியா உடையும். இந்தியாவின் வலிமை குன்றும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தடைப்படும். "இந்தியா இந்தியருக்கு" என்ற யதார்த்தம் தான் ஒரு வலுவான நாடாகத் திகழ வழியுண்டு. "மத்திய அரசு எல்லா முடிவுகளையும் எடுக்குமானால், மாநிலங்கள் பிரிவினையை நாடும்" என்று எரிக் சொல்கெம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

**படை**

படையினர் அணிவகுத்து செல்லும் பொழுது அழகாகத்தான் இருக்கும். நன்றாகப் பயிற்சி பெற்ற படையினர் ஒரு முகமாக ஒருருப்படுத்தலில் ஒரே மாதிரியான உடை, ஒரே மாதிரியான நடை, ஒரே திசையில் நடக்கும் பொழுது பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். அவர்கள் தங்கள் கைகளை வீசும் பொழுது, ஒரு கைதான் தெரியும். ஒரு கால்தான் தெரியும். இது, ஒருருப்படுத்தலின் உச்சக் கட்டம். ஆனால், அங்கு ஒற்றுமை இல்லை. புரிந்துணர்வில்தான் ஒற்றுமை வளரும்.

படை என்று சொல்லும்பொழுது, படை என்ற ஒரு பொதுச் சொல்லில், ஒரு தனி மனிதனோ மனிஷியோ தங்கள் தங்கள் அடையாளங்களை இழந்து விடுகிறார்கள். ஒரு பொதுவான போலியான அடையாளத்தில் தங்களை மறைத்துக் கொள்கிறார்கள். சில வேளைகளில் தங்கள் சொந்த முகங்களையே இழந்து விடுகிறார்கள். செம்மறிக் கூட்டத்தை மேய்ப்பன் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும்பொழுது அந்த செம்மறிக் கூட்டம் ஒரு மந்தைக் கூட்டமாகவே செல்லும். ஒருருப்படுத்தல் பல வேளைகளில் மனிதர் மந்தைக் கூட்டமாக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, இவர்களுக்குச் சுய சிந்தனை என்ற ஒன்று கிடையாது. அப்படி ஒரு சுய சிந்தனை இருந்தாலும் அச்சிந்தனையை வெளிப்படுத்த இவர்களுக்கு உரிமை இல்லை. பெருமளவில் இவர்கள் ஒருவகை அடிமைகள்தான்.

அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்வு "கோத்தா கோமகவில்" மக்கள் எழுச்சி. இங்கு நின்ற ஒரு காவல்துறையினன் போராட்டத்தைப் புரிந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவாகத் தனது கருத்தைத் தெரிவித்தார். இன்று, அவரின் முகவரி தெரியாது. மேலும் ஒரு நிகழ்வு.

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர். போராளிகளுள் ஒரு பெரிய புள்ளியின் மகன் இராணுவத்தினரின் பிடியில். குழந்தையின் முகத்தைத் தொலைக்காட்சியில் பார்க்கின்றோம். கள்ளங் கபடமற்ற பிஞ்சு முகம் இராணுவத்தினர் கொடுத்த பிஸ்கற்றை உண்பதையும் பார்க்கின்றோம். 'குழந்தையை என்ன செய்வது' என்று மேலிடத்தில் கேட்கிறது சுய சிந்தனை இல்லாத இராணுவம். (அடையாளம் இல்லை) தனித்துவம் இல்லை; தனியானதொரு அடையாளம் இல்லை; சொல்வதைச் செய்யும் கூலிப்படை. மேலிடம் சொல்லுகிறது" "கொன்று விடு" பிஸ்கற் கொடுக்கும் பொழுது இருந்த கருணை எங்கே? படையின் அடிமைத்தனம். ஒருருவாக்கத்தில் ஒற்றுமை இல்லை.

**திருஅவை**

இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர், திருஅவை (அப்பொழு திருச்சபை) ஒருருவாக்கப்படுத்தலில்தான் குழுக் கவனத்தையும் செலுத்தியது. மறை மாவட்டக் குருக்கள் பயிற்சியின் (அப் பொழுது உருவாக்கம் என்ற சொல் வழககில் இல்லை), துறவற சபையினரின் பயிற்சியில் ஒருருப்படுத்தலே நடைமுறையில் இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் இரந்து இங்கு வருகை தந்த துறவியருக்குத் தெரிந்த ஒரு பழக்கப்பட்ட பயிற்சி படையினரின் (military) பயிற்சி, அதையே குருத்துவ - துறவறப் பயிற்சியிலும் நடைமுறைப்படுத்தினர். ஒரே வகையான பாடத்திட்டங்கள், ஒரே வகையான சிந்தனை, ஒரே வகையான உடை, ஒரே வகையான வாழ்க்கை முறை, ஒரே வகையான வழிபாடு, செபமுறை என்று எதிலுமே ஒருருப்படுத்தலே இருந்தது.

மாற்றுச் சிந்தனைக்கு எந்த இடமும் இல்லை. கத்தோலிக்க திரு அவையை ஓர் இறுகிய மூடிய அமைப்பாகவே வைத்திருந்தார்கள். ஏனைய மதங்களை புறவினத்தார் ஆகவும், ஏன் அஞ்ஞானிகளென்றும் கருதி அதையே கடுமையாக நடைமுறைப்படுத்தினார்கள். மாற்றுச் சிந்தனைக்கு இங்கு இடம் இருக்கவில்லை. காலத்துக்கு ஒவ்வொத படிப்பினைகள் காலாகாலமாக, தலைமுறை தலைமுறையாக மக்கள் மேல் திணிக்கப்பட்டன. மாற்றுக் கருத்துக் கொண்டோரைதிருஅவையிலிருந்துவெளியேற்றினார்கள் (excommunication). இப்படியாக பல சிந்தனையாளர்களை யும், இறையியலாளர்களையும், ஞானிகளையும் திருஅவை இழந்தது. ஆயினும், அவர்களது பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் பயன்பட்டோர் திருஅவை உள்ளும் புறமும் இருந்தார்கள். அவர்கள் எழுத்துக்கள் சாகவில்லை.

**சனநாயகம் இங்கு இல்லை!**

ஒருமுறை ஆயர் வியான்னி அவர்களுடன் நான் உரையாடிக் கொண்டிருந்த வேளை, அவர் சொன்னார் "செல்வம் திருஅவையில் சனநாயகத்திற்கு இடமில்லை" அவர் சொல்லியபடியே இறுதிவரை ஆட்சி செய்தார். அவர் சொல்லிய வேளை, ஜோன் பேள் II அவர்களுடைய ஆட்சிக்காலம். அதனால், நான் உரையாடலைத் தொடரவில்லை. போப் பிரான்சிசின் தலைமைத்துவக் காலமாக இருந்திருந்தால், எனது கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்திருப்பேன்.

**வத்திக்கான் சங்கம்**

இத்தகைய பின்புலத்தில்தான் திருத்தந்தை 23ம் ஜோன் அவர்கள் துணிந்து இரண்டாவது வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுவித்தார். இறுக மூடிய திருஅவை உள்ளுக்குள் மூச்சுத் திறனியது (suffocake). இதை உன்னிப்பாகப் பார்த்த திருத்தந்தை 23ம் ஜோன் 'சுவாசக்காற்று' உள்ளுக்குள் வருவது ஆரோக்கியமானதென நினைத்து மூடிய சில ஜன்னல்களைத் திறந்து விட்டார். அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்ட இறையியலாளர்கள் வத்திக்கானுக்கு வரவழைக்கப்பட்டார்கள். ஆங்காங்கே கருத்தரங்குகள் நடத்தினார்கள். சங்கம் சென்ற ஆயர்கள் இக்கருத்தரங்குகளில் பங்கு கொண்டார்கள். சங்கத்தில் புதிய கருத்துகளுக்கு இடமளிக்கப்பட்டது. இறுதியில் மூடிய திருஅவையை கொஞ்சமாவது




திறந்து விட்டார்கள். திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சி தோன்ற ஆரம்பித்தது.

**பின்னடைவு**

துர் அதிர்ஷ்டவசமாக வத்திக்கானில் ஆட்சிக்கு வந்த முதல் போலந்து தேசத்தைப் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் கொண்ட ஜோன் பேள் II தனது கட்டுப்பாட்டுக்குள் அனைத்தையும் கொண்டு வர விரும்பினார். மீண்டும் மாற்றுச் சிந்தனையுடையோரை புறந்தள்ள ஆரம்பித்தார். குருமடத்துக் கல்வியை ஒருருப்படுத்தினார். திருவழிபாட்டுச் சடங்குகளை பண்பாட்டு மயமாக்கலை நிறுத்தினார். விடுதலை இறையியலை ஓரங்கட்டினார். இலத்தீன் மொழியில் திருவழிபாட்டை நடத்த அனுமதி அளித்தார். இலத்தீன் மொழி இங்கு பிரச்சினையல்ல. ஆனால் இலத்தீன் மொழியுடன் இணைந்த ஒரு வெற்றிவாடைக் (triumphalism) குரிய நடை உடை ஆட்சி அமைப்பும், பின் நோக்கிச் செல்லும் போக்கும், பழமையை நாடும் நிலையும், சர்வாதிகார ஆட்சி முறையும், மீண்டும் திருஅவையில் தலைதூக்கி முனைந்தது.

1054 இல் திருஅவையில் ஒரு பாரிய உட்பிளவு (schisum) ஏற்பட்டது. இந்தப் பிளவு மேற்குலக திருஅவையாகவும், கிழக்குலக ஒத்தொடொக்ஸ் திருஅவையாகவும் பிரிந்தன. அதுமட்டுமல்ல மேற்குலகத் திருஅவை இலத்தீன் திருஅவையாகவும், கிழக்கு ஒத்தொடெக்ஸ் திருஅவை கிரேக்க திருஅவையாகவும் மொழிவாரியாகவம் பிரிந்தன. இதிலிருந்து பெருந் தவறுகள் தோன்றின.

மேலும், மேற்கத்திய இலத்தீன் திருஅவை மேலும் பல சபைகளாகப் பிரிந்தன. அதேபோன்று கிழக்கிந்திய ஓர்தொடொக்ஸ் கிரேக்க திருஅவையும் பலவாறு பிரிந்தன. இவையெல்லாம் கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் செயல்கள் அல்ல. பிரிந்தவர்கள் சிலர் ஒருவரையொருவர் சாடவும், "அவர்கள் பிழை நாங்கள் சரி" என்ற வாதத்தில் மூழ்கவும் முனைந்தனர். பிரிவினைகளில்தான் பிசாசு உண்டு என்று நான் பிசாசைப் பற்றிய கட்டுரையில் எழுதியிருந்தேன். இவ்விடத்தே அந்த ஞாபகம் வருகின்றது.

மக்கள் குழம்பினார்கள். குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைந்தனர் பிரிவினைகளை வளர்ப்போர்.

(கனவு வளரும்...)

# காவலன் கலசம்

## கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் தவக்கால நிதி சேகரிப்புகள்

| பங்குகள் | தொகை |
|---|---|
| திரு. திருமதி புவிராஜசிங்கம் குடும்பம் | 24,000.00 |
| பளை | 11,000.00 |
| கொய்யாத்தோட்டம் | 21,500.00 |
| மிருசுவில் | 11,000.00 |
| அஞ்சனந்தாழ்வு | 3,910.00 |
| கட்டைக்காடு | 6,000.00 |
| பேராலயம், யாழ்ப்பாணம் | 100,000.00 |
| மாரீசன்கூடல் | 25,000.00 |
| சாவகச்சேரி | 15,130.00 |
| ஊர்காவற்றுறை | 55,000.00 |
| சுண்டுக்குளி | 15,020.00 |
| நாவாந்துறை | 59,000.00 |
| எழுவைதீவு | 9,000.00 |
| இளவாலை | 11,800.00 |
| உருத்திரபுரம் | 5,620.00 |
| புதுக்குடியிருப்பு | 21,000.00 |
| கோப்பாய் | 9680.00 |
| மானிப்பாய் | 15,000.00 |
| பருத்தித்துறை | 48,000.00 |
| மாதகல் | 11,340.00 |
| மணற்காடு | 10,000.00 |
| நெடுந்தீவு | 25,000.00 |
| சக்கோட்டை | 17,240.00 |
| சென்.பெனடிக்ற் ஆலயம், நல்லூர் | 6,500.00 |
| ஆனைக்கோட்டை | 10,000.00 |
| அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம் | 70,500.00 |
| குருநகர் | 88,550.00 |
| பரந்தன் | 15,000.00 |
| கொழும்புத்துறை | 42,000.00 |
| புனித. வின்சன் டி போல் சபை, நாவாந்துறை | 20,000.00 |
| திருநெல்வேலி | 3,660.00 |
| பெரியவிளான், இளவாலை | 13,300.00 |
| கரவெட்டி | 10,000.00 |
| சென். ஜேம்ஸ், இளவாலை | 4,000.00 |
| வட்டக்கச்சி | 3,000.00 |
| கரம்பன் | 6,000.00 |
| பாசையூர் | 101,200.00 |
| சில்லாலை | 3,220.00 |
| சாட்டி | 13,680.00 |
| பண்டத்தரிப்பு | 5200.00 |
| புனித திரேசா ஆலயம், யாழ்ப்பாணம் | 6,000.00 |
| முழங்காவில் | 8,000.00 |
| உரும்பிராய் | 20,000.00 |
| | 980,050.00 |

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

### நம்பிக்கை அறிக்கையின் பதினோராம் பிரிவு

**159. விண்ணுலக மகிமையும் மகிழ்ச்சியும் என்றால் என்ன?**

விண்ணுலக மகிமையும் மகிழ்ச்சியுமென்றால் இறைவனை முடிவில்லாத காலத்திலும் நேராகக் காணவும் அன்பு செய்யவும் அனுபவிக்கவும் கூடிய நிலையாகும்.

**160.விண்ணுலக மகிமையைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது?**

விண்ணுலக மகிமையைப்பற்றி பின்வருமாறு வேதாகமம் கூறுகிறது: "தம்மிடம் அன்பு கொள்பவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை.செவிக்கு எட்டவில்லை, மனித உள்ளமும் அதை அறியவில்லை" (1கொரிந்தியர் 2:9).

**161. தீயோரும் முடிவில்லாக் காலத்திற்கும் வாழ்வார்களா?**

ஆம், தீயோரும் முடிவில்லாக் காலத்திற்கும் நரக நெருப்பில் தண்டிக்கப்பட்டு வாழ்வார்கள்.

### எதிர்நோக்கும் அருளும்

**162. நம்பிக்கை மாத்திரம் மீட்பைத் தருமா?**

நற்செயல்கள் இல்லாத நம்பிக்கை எமக்கு மீட்பைத்தராது. நாம் எதிர்நோக்கும், பிறரன்பும் கொண்டிருக்கவேண்டும்.

**163. எதிர்நோக்கு என்றால் என்ன?**

இறைவனின் அதி உன்னத கொடை எதிர் நோக்கு ஆகும். எதிர்நோக்கினூடாக இறைவன் முடிவில்லா வாழ்வை எமக்குத் தருவார் என்கின்ற உறுதியான நம்பிக்கையும், இறைவன் வகுத்தவற்றை நாம் நிறைவேற்றுகிறபோது மீட்பை அடைவதற்கான வழிமுறைகளை இறைவன் தருவார் என்கின்ற நம்பிக்கையும் எதிர்நோக்கு எனப்படும்.

**164. ஏன் நாம் இறைவனில் எதிர்நோக்குக் கொண்டிருக்க வேண்டும்?**

நாம் இறைவனில் எதிர்நோக்குக் கொண்டிருக்க வேண்டும் என்பதன் காரணம் அவர் முடிவில்லா நன்மையும் முடிவில்லா அதிகாரமும் கொண்டு, தனது வாக்குறுதிகளுக்கு என்றும் பிரமாணிக்கமாயிருக்கிறார் என்பதாகும்.

**165. நாங்கள் இயல்பாகவே எம் மீட்பின் மட்டிலான நற்செயல்களைச் செய்ய முடியுமா?**

நாங்களாகவே எமது நற்செயல்களினூடாக மீட்பை அடைந்து விட முடியாது மாறாக இறையருள் என்கின்ற உதவி எமக்குத் தேவை.

**166. அருள் என்றால் என்ன?**

எமது மீட்பிற்கும் புனிதத்துவத்திற்குமாக இலவசமாக எம்மேல் பொழியப்படுகின்ற இறைவனின் அதி உன்னத கொடை அருள் என அழைக்கப்படுகிறது.

**167. எவ்வாறு நாங்கள் இறை அருளைப் பெற்றுக் கொள்ளலாம்?**

பிரதானமாக செபத்தினூடாகவும் அருளடையாளங்களினூடாகவும் நற்செயல்களூடாகவும் இறையருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### செபம்

**168.செபம் என்றால் என்ன?**

எமது எண்ணங்களையும் இதயத்தையும் இறைவனை நோக்கி எழுப்புதலே செபமாகும்.

**169.எமது எண்ணங்களையும் இதயத்தையும் எவ்வாறு நாங்கள் இறைவனை நோக்கி எழுப்புகின்றோம்?**

இறைவனை மகிமைப்படுத்துவதாலும், புகழ்வதாலும், நன்றி கூறுவதாலும் எமது ஆன்மாவிற்கும் உடலிற்கும் தேவையான ஆசீர்வாதங்களுக்காக இறஞ்சுவதன்மூலமாகவும்இறைவனை நினைத்துக்கொண்டு எமது எண்ணங்களையும் இதயத்தையும் இறைவனை நோக்கி உயர்த்துகின்றோம்.

**170.தாங்கள் சொல்வதன் பொருளை உணராமலும் கடவுளை நினைக்காமலும் செபிப்போர் உண்மையாகவே செபிக்கிறார்களா?**

தாங்கள் சொல்வதன் பொருளை உணராமலும் கடவுளை நினைக்காமலும் செபிப்போர் உண்மையாகவே நன்றாகச் செபிப்பதில்லை. அவர்களுடைய கவனக் கலைப்பான்கள் அவர்களது அறிவுக்குட்பட்டதாயின் அவர்களுடைய செபங்கள் பலனற்றவையாகும்.

**171.செபங்களுக்குள் உயர்ந்த செபம் எது?**

செபங்களுக்குள் உயர்ந்த செபம் ஆண்டவர் கற்பித்த 'விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே' என்ற செபமாகும்.

**172. யார் "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே" என்ற செபத்தைக் கற்பித்தார்?**

இயேசுக்கிறிஸ்துவே 'விண்ணுலகில் இருக்கின்ற' என்ற செபத்தைக் கற்பித்தார்.

**173. விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்ற செபத்தைத் தருக?**

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதென போற்றப் பெறுக, உமது ஆட்சி வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக, எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக் கெதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல் எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களை சோதனைக்குட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**174."விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந் தையே" என்ற செபத்தில் 'எங்கள் தந்தையே' என விழிக்கப்படுபவர் யார்?**

இச் செபத்தில் இறைவனே 'எங்கள் தந்தையே' என விழிக்கப்படுகிறார்.

(தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

14

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 8

**தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.**



**8.3 போதகர் இயேசு, சினத்துடன் சீறி, ஆலயப் பெரு விழா ஆயத்தங்களைச் சிதறடிக்கின்றார் (யோவான் 2:13-22)**

அன்பு செய்தவர். அத்தகைய ஒரு இயேசு, இந்த ஜெருசலேம் தேவாலயத் திற்குள்ளே, இவ்வளவு சினங்கொண்டு எல்லாவற்றையும் சிதறடித்து, மேசைகளைப் புரட்டி எறிந்து மக்களைத் துரத்தி ஏன் இவ்வளவு அட்டகாசம் பண்ணினார்?

இதற்குள் ஆழமான கருத்தொன்று இருக்கின்றது. என்ன வென்றால் இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து இறைவனால் விடுவிக்கப்பட்டார்கள். விடுதலை அளிக்கும் இறைவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்து, அவர்களை விடுதலைப் பயணத்திலே மோயீசனின் தலைமைத்துவத்திலே நடத்திச் சென்றார்.

அந்த விடுதலையடைந்த யூத சமூகம், ஜெருசலேம் தேவாலயத்தைத் தமது விடுதலையின் நினைவாகப் பெருமையுடன் கட்டியெழுப்பி, அந்த ஜெருசலேம் தேவாலயத்தில் தான், தங்களை மீட்ட இறைவன் இருக்கின்றார், என்ற உன்னத சிந்தனையுடன், வாழ்ந்தார்கள். யூதமக்கள் அனைவருக்கும் ஜெருசலேம் தேவாலயம், இந்த உலகத்திலே இறைவனின் பிரசன்னம் என்றாற்போல அவர்கள் அங்கே கூடுவார்கள். தங்களுடைய பெரிய விடுதலையை நினைவு கூருவதற்கு, பாஸ்கா விழாவை மிகப்பெரும் விழாவாகக் கொண்டாடுவார்கள். இதுதான் யூதர்களுடைய மிகமிகப் பெரிய விழா.

அப்படியான ஒரு விழாவிற்குத்தான், ஒவ்வொரு வருடமும், இயேசுவும் பெற்றோர் உறவினருடன் சென்று வந்தவர். இவ்வருடமும் அங்கே வளமைபோல் செல்கின்றார். ஆனால் கடந்த காலத்தில் அவ்வாலயத்திற்குள் நடப்பனவற்றைக் கூர்மையாக அவதானித்து, தலைவர்களுடனும் விவாதித்தவர், இவ்வருடம் தமது பாஸ்கா நிகழ்வுக்கு முன்பதாக யூத மக்களின் மிகப் புனிதமான ஆலயத்தைப் பற்றிய உண்மையை விளக்கும் நோக்கத்துடன் செல்லுகின்றார்.

புனிதமான நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திருவிழா, புனிதமாக மீட்கப்பட்ட மக்கள் நினைவாகக்கட்டப்பட்ட ஒரு தேவாலயம்! இந்தப் பெரிய பரந்த தேவாலயத்திற்குள்ளே நடக்கும் அந்த நன்றிப் பாஸ்கா விழாவை மக்கள் கொண்டாட வருகின்றார்கள். ஆனால் பல ஆண்டுகளின் பின் அந்தத் திருவிழாவின் கோலம் மாறி, நோக்கங்கள் மறைந்து, அவர்கள் அங்கு செய்யவேண்டிய நன்றி உணர்வுகளைத் தெரிவிக்காது, அல்லது நன்றிப் பலிகளைச் செலுத்தாது, அவர்கள் அந்தத் திருவிழாவை வேறொரு பண்டிகையாக மாற்றி, அங்கே கடைகளை நிறுவி, பல வித பொருட்களை விற்பனை செய்து, பணம் பரிமாறி, அதாவது சந்தைகளைப் பெருக்கி, பிழையான வழியிலே நடந்துகொண்டிருந்தார்கள். ஆகையினால்தான் இயேசு தெய்வீக துணிவுடன், கையிற்றைப் பின்னி அவர்கள் எல்லோரையும் அடித்து விரட்டி, அட்டகாசம் செய்து, மேசைளை விழுத்தி, - புனிதமான என் தந்தையின் இல்லத்தை மாசுபடுத்தாதீர்கள் - என்று கூறுகின்றார். இயேசு சினங்கொண்டு சாட்டை பின்னி மக்களைச் சிதறடித்த இந்தச் சம்பவத்தின் பின்னணியிலே, இன்றைய இறை மக்களாகிய நாங்கள், ஆயர்கள் குருக்கள் துறவிகள் வழிபாடு நடத்துபவர்கள் ஆலயத்தைப் பராமரிப்பவர் ஆகிய அனைவரும், பல கேள்விகளை எழுப்பவேண்டி இருக்கின்றது.

(தொடரும்...)

# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.



**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

(சென்ற இதழின் தொடர்ச்சி..)

### பொதுநிலையினரின் பாரம்பரியப் பணிகள்

அத்தோடு ஆலய நிர்வாக விடயங்களுக்கு அப்பால் பல அறிஞர்கள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள்போன்றோரும்,நாடக ஆசிரியர்கள், நடிகர்கள், நெறியாளர்கள் போன்றோரும் கட்டட, சிற்ப, ஓவியக்கலைஞர்கள் போன்றோரும் புலவர்கள், கவிஞர்கள், இசையாளர்கள், வாத்தியக் கலைஞர்கள் போன்றோரும் மூலிகை வைத்தியர்கள், நோய்கள், பேய்களைச் செபத்தின் துணைகொண்டு விரட்டுபவர்கள் போன்றோரும் இருந்தனர். இவ்வாறு வழி வழியாய் வந்த பலர் ஆயர்பணியேற்ற காலத்திலும் பணியாற்றிக் கொண்டி ருந்தனர். விசேடமாக ஏற்கெனவே ஒல்லாந்தர்காலத்தில் துன்புற்ற திரு அவையின் நம்பிக்கையை இலங்கைக்கு வெளியில் இருந்து அருட்பணியாளர்கள் வருவதற்குத் தடைசெய்யப்பட்ட நிலையில் கோவைத் தியான சம்பிரதாயசபை அருட்பணியாளராகிய ஜோசவ்வாஸ் வரும் வரையும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டிக்காத்த பெருமை இவர்களுடையதாகும். இவர்களின் பணியின் காரணமாகவே அம்மறைத்துன்ப காலத்தில் பலர், கத்தோலிக்கத்தில் உறுதியடைந்து இரத்த சாட்சியம் பகர்ந்தனர்.

ஆனால் பெரும்பாலான இடங்களில் பரம்பரை பரம்பரையாகச் சில குறிப்பிட்ட குடும்பங்களே இந்த உரிமையைத் தமதாக்கி விட்டுக்கொடுப்பின்மையுடன் செயற்பட்டு வந்தனர். பல இடங்களில் இப்பணிகள், பதவிமோகம், அதிகார அடக்குமுறை, சுயநல ஆணவம், பரம்பரை ஆதிக்கம், சமூக வேறுபாட்டுத் துவேஷம் காரணமாகப் பல்வேறு தீமைகளுக்குக் காரணமாயின. எனவே இவர் இப்பொதுநிலையினரின் பாரம்பரியப் பணிகள் தொடர்பான அதிகாரங்களைப் படிப்படியாகக் குறைத்தார்.

இவ்வாறு பணிசெய்வோரின் தொகை பெருகியதால் ஆயரின் தலைமைத்துவத்துடனான தொடர்பும், ஆலோசனையும் அற்றுப்போய் கட்டுப்பாடிழந்தவர்களாகப்பேய் பிடித்தவர்களைப் பகிரங்கமாகச் சிலுவை மரத்தில் கட்டியடித்தல், அவர்களின் கண்களில் எண்ணெய் ஊற்றுதல் போன்ற குருட்டுப்பக்திச் செயல்களிலும் ஈடுபட்டனர். பல புலவர்கள் பேய்களைக் கட்டும் மாந்திரீக 'வாலாய' சக்தி காரணமாகப் பலரின் பொருள் அழிவுகளுக்கும் அவலச்சாவுகளுக்கும் ஆளாயினர்.ஓரிரு எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.ஒரு புலவர் ஒருநாள் தனது வயலை உழுது தரும்படி ஒரு உழவு இயந்திரச் சொந்தக்காரரைக் கேட்டபோது அவர் மறுக்கவே “என் நெஞ்சு திக்க,உன் மெசின் நிற்க” என்று சொல்லிவிட்டுப் புலவர் சென்றதும் இயந்திரம் நின்றுவிட்டது. பல முயற்சிகளுக்குப்பின்பு ஓடோடிச் சென்று மன்னிப்புக் கேட்டபின்னர் புலவர் வந்து இயந்திரத்தில் தொட அது இயங்கியது. புலவரின் வயல் உழவுக்கு, உழவு இயந்திரக்காரர் முன்னுரிமை கொடுத்தார். இன்னுமோரிடத்தில் கள்ளுத்தர மறுத்தவரிடம் “என்மனம் ஆறாது, உன் பனை ஊறாது” என்று சொல்லிச் சென்றார் புலவர் ஒருவர். பல நாட்கள் பனைகள் பொய்த்துவிட்டன. புலவரைத் தேடிக் கள்ளுக் கொடுத்த பின்னரே பனைகள் வளம் பெற்றன. சாகுந்தறுவாயில் இருந்த புலவர் ஒருவருக்கு உயிர் பிரிய முடியாமல் பல நாட்கள் போராடினார். ஒருநாள் காகங்கள் வந்து வீட்டுக் கூரையில் மொய்த்தன. காகங்கள் சென்றபின்பு உயிரும் பிரிந்திருந்தது. முகத்தைப் பார்த்தபோது கண்கள் இரண்டையும் காணவில்லை. இவ்வாறு தமது கவிப்புலமையைத் தமது சுயஇலாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்திய பலர் இறுதியில் தாமே தமது அழிவைத் தேடிக்கொண்டனர். இத்தீமைகளை அழிக்கும் ஓர் துணிவான போராளியாக இவர் செயற்பட்டுப் பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்துப் படிப்படியாகக் குறைந்து செல்ல வழிவகுத்தார்.

வேதனையிலும் உறுதிகொண்டார். இவரது செயற்பாடுகளைப் பலர் குறைகூறிப் பாரம்பரியம் அழிகின்றது, பக்தி குறைகின்றது என விமர்சித்தாலும், இவர் அஞ்சாநெஞ்சோடு தீமைகளை வளரவிடாமல் தடுப்பதில் கவனமாக இருந்ததால் பொது நிலையினர் மத்தியில் மட்டுமல்ல, மக்களின் எதிர்ப்புக் காரணமாக அருட்பணியாளர்கள் மத்தியிலும் விமர்சனத்திற்குள்ளானார். பல அருட்பணியாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டனர். நவதினப் போட்டி அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஆலயநிதி, தாபரிப்பு நிதி குறைந்து போனதும் அல்லாமல், பரம்பரைக் கத்தோலிக்கரின் பணபலத்தால் வெளிப்படையாக இடம்பெற்ற பங்குப் பராமரிப்பும் குறைந்ததோடு பல அருட்பணியாளர்கள் இவரின் கையையே எதிர்பார்க்கும் நிலையும் உருவாகியது. மேலும் தமது பணபலத்தால் சிறிய ஆலயங்களின் விழாக்களைச் சிறப்பித்தவர்கள், உதவி செய்யப் பின் நின்றனர். அத்தோடு யாத்திரைத் தலங்களிலும் தமது ஆலய விழாக்களுக்குப் பணம் சேர்த்தவர்கள் தடை செய்யப்பட்டமையும் இதற்குக் காரணமாயிற்று. (தொடரும்...)

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

---

### அர்த்தமுள்ள ஆன்மீகம்

# நலம் தரும் நம்பிக்கை



மனித வாழ்வில் ஒட்டு மொத்தப் பயணமும்நம்பிக்கையைஅச்சாணியாகக் கொண்டே நகர்கிறது. ஆதி மனிதனோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் இன்றைய மனிதனது தேவைகள் எல்லையின்றி அதிகரித்திருப்பதால்அதற்குநிகராகத்தேவைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அவனது நம்பிக்கை அவனுக்கு உத்வேகம் அளிக்கிறது. பண்டமாற்றோடு வாழ்ந்த ஆதி மனிதனது பிரச்சினைக்கான தீர்வுகள் ஒரு வரம்புக்கு உட்பட்டவையாக இருந்தன. அதனால் அவனது நம்பிக்கையும் ஒரு எல்லைக்குள்ளேயே இருந்தது. இன்றையமனிதனின்தேவைக்கான தீர்வுகளோ எல்லையற்று உலகம் கடந்த அளவு அவனுக்குத் தேவைப்படுகிறது. தனி மனித வாழ்வு தொடக்கம் சமூக வாழ்வு என்று எல்லை கடந்து நிற்கிறது. சமூக - பொருளாதார அரசியல் - கலாசார - சமயம் என்று வாழ்வின் அனைத்து இயல்புக் கூறுகளிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கு விடிவைத்தேடி நம்பிக்கையோடு நகரவேண்டி இருக்கிறது.

மனித நம்பிக்கையும் நம்பிக்கை ஊட்டலும் மேலே பார்த்தவற்றின் விடிவுகளை அல்லது மீண்டு எழுதல்களை நம்பிக்கையின் பலம் எவ்வாறு தட்டிக் கொடுக்கிறது என்பதை கண்முன் கண்ட நமது கடந்த கால வரலாறுகள் ஊடாக நாம் கண்டுகொள்ளலாம். நமது தமிழ் மண் சிதைக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டு, உயிரிழப்புக்களும், இடப்பெயர்வுகளும், பஞ்சம் பசி பட்டினிகள் துரத்திய போதும் மக்கள் நம்பிக்கையைக் கைவிடவில்லை. இதற்கு வன்னிமண் மிகச் சிறந்த உதாரணமாகும். இது மட்டுமன்றி யப்பானில் ஹிறோஸிமா அமெரிக்காவில் ஹாவாய் அடையாளம் தெரியாது சிதைக்கப்பட்டபோதும் மக்களின் உறுதியான நம்பிக்கையால் உலகின் அழகுமிகு நாடுகளாக அவை உயர்ந்து நிற்கின்றன. மாற்றுத்திறனாளிகளும் மண் இழந்தோரும் அனைத்தையும் இழந்தவர்களும் கூட நம்பிக்கையோடு கரம்கோர்த்ததால், முழு முயற்சியோடு ஒன்றுபட்டு உழைத்ததால் நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை இன்று கண்முன்னே உயிர்பெற்றிருப்பதைக் காண்கின்றோம். அதுமட்டுமன்றி ஒளி இழந்த எதிர்கால சந்ததியின் வாழ்வுக்காக வாழ்வகம் போன்ற நிறுவனங்களை அமைத்து கல்விசார், தொழில் சார் முயற்சிகளை ஊட்டி வருகின்றனர். இதில் பார்வை இழந்த ஒரு மாணவன் உயர்தரப் பரீட்சையில் மூன்று “ஏ” திறமைச் சித்திகளைப் பெற்றமை நம்பிக்கையூட்டலின் செயற்பாட்டுக்குக் கிடைத்த சாதனையாகும். “கார்முகில் மறைப்பதனால் விண்மீன் ஒளி இழப்பதில்லை.” இன்றுகூட எரிபொருள், எரிவாயு இல்லாமையால் எதிர்காலத்தை இழந்துவிட்டது போல் தெற்கு மக்கள் கொதித்து நிற்கிறார்கள். ஆனால் வடக்கு மக்கள் வரிசைகளில் நின்றபோதும் கலங்காமல் சாதாரணமாகவே வாழ்கிறார்கள். நிலமை சீராக வில்லையெனினும் “எதுவும் கடந்து போகும்” “இதுவும் கடந்து போகும்” என்ற உறுதியான நம்பிக்கையோடு வாழ்ந்தால் எதையும் துணிவோடு எதிர்கொள்ளலாம் இதனால் தான் கொரோனா போன்ற நோய்களையும் கடந்து வந்தோம். “ஓட்டைப்படகும் ஒடிந்த துடுப்பும் கரை சேரும் கடல்போல் நம்பிக்கை இருந்தால்” மனித வாழ்வுப் பயணத்தில் அவன் காலடி வைக்கின்ற ஒவ்வொரு விடயமுமே நம்பிக்கையின் அடித்தளத்தில் நகர்த்தப்படுவதை நாம் உணர வேண்டும். மருத்துவமனைக்குச் செல்கிறோம். நகர்த்துவது குணமளிக்கும் என்ற நம்பிக்கை. வலையோடு கடலுக்குச்செல்கிறோம். நகர்த்துவது மீன்பாடு கிடைக்கும் என்ற நம்பிக்கை. பாடசாலையில் காலடி பதிக்கின்றோம். நகர்த்துவது அறிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை. திருமணங்களில் இணைக்கப்படுகிறோம். நகர்த்துவது வம்சம் விருத்தி பெறும் என்ற நம்பிக்கை. ஆலயத்துள் அடி பதிக்கிறோம். நகர்த்துவது இறையருள் கிடைக்கும் என்ற நம்பிக்கை. “நம்பிக்கை வைத்துக் கல்லையும் பார்த்தால் அது தெய்வத்தின் சாட்சியடா.” அரசியல் குழப்பங்கள், பொருளாதாரப் பின்னடைவு, பொருட்கள் தட்டுப்பாடு, பாடசாலைக்கல்வி சீர்குலைவு, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றால் எழுந்துள்ள பாரிய வலைப்பின்னல்களுக்குள் வாழும் வகை தெரியாது அனைத்து நிலைகளிலும் இன்று நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில் ஏங்கிக்கொண்டிருக்கிறோம்.

. **“கார்முகில் மறைப்பதனால் விண்மீன் ஒளி இழப்பதில்லை.”**

இந்நிலையிலிருந்து மீள்வது எப்படி என்று தெரியாமல் நாட்டை விட்டுத்தப்பி ஓடவும் பலர் நினைக்கின்றோம். இது நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் செல்வதற்கு ஒப்பான நிலையாகும். சில குடும்பங்கள் முழு நம்பிக்கையும் இழந்து தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதையும் குழந்தைகளை, பிள்ளைகளை ஆறுகளிலே, கடல்களிலே வீசுவதையும் அறிகிறோம். இது நம்பிக்கை இழந்துவிட்ட நிலையா? நம்பிக்கை இறந்துவிட்ட நிலையா? என்று எண்ணத்தோன்றுகிறது. எனவே, இவ்வாறான நிலைகளில் துன்புறும் மக்களின் மனங்களிலே நம்பிக்கையை ஊட்டவேண்டிய பொறுப்பு, கடமை நம் ஒவ்வொருவர் கையிலும் இறைவனால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விவிலியத்தில் இயேசு குறிப்பிடுவது போல “வானத்தின் தோற்றத்தைப் பகுத்துணர நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் ஆனால் காலத்தின் அறிகுறிகளை அறிய உங்களால் முடியாதா?” மத் 16:3 நம்பிக்கை கொடுத்து பழைய ஏற்பாட்டுக்காலம் முதலே மிக ஆழமான விடயங்களும் கதைகளும் சம்பவங்களும் அறிவுரைகளும் இறைவனால் நமக்குத் தரப்படுகின்றன. இவை தொடர்பாக அடுத்தடுத்த செய்திகளிலும் நம்பிக்கையிலும் ஆன்மீகத்திலும் நலம் பெற உங்களைச் சந்திக்கும் வரை....

(தொடரும்...)

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

# இரக்கத்தின் உருவாக அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ்



**பல்முக ஆளுமை கொண்ட அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் யாழ் மரியன்னைப் பேராலயம், உயிலங்குளம், நல்லூர், கொழும்புத்துறை, கோப்பாய் போன்ற பங்குகளிலும் புனித மடுத்தீனார் சிறிய குருமடம், புனித வளனார் அச்சகம், யாழ்.பல்கலைக் கழக நல்லாயன் நிலையம் போன்ற மறைமாவட்டப் பணியகங்களிலும் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை போன்ற கல்வி நிறுவனத்திலும் பணியாற்றினார். அவரது ஆன்மீகம், பணிகள், ஆளுமைப் பண்புகள், ஆளுமைத் திறன்கள் போன்றவற்றை நோக்குவது ஏனையோருக்கும் உந்து சக்தியாக விளங்கலாம் எனக் கருதித் தரப்படுகின்றன.**

## அ. ஆன்மீக வாழ்வு

**1. நற்கருணை ஆண்டவர் மீதான பக்தி:** இதுவே இவரது வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒரு மிகமுக்கியமான பக்தி முயற்சியாக இருந்தது. நற்கருணை ஆண்டவரோடு தன் வாழ்வைப் பகிர்வதில் இவர் அதிக நேரம் ஈடுபடுவார். தூக்கமற்ற இரவு நேரங்களில்கூட எழுந்து ஆலயத்துள் சென்று செபிப்பதாகப் பல தடவைகள் கூறியிருக்கின்றார். இதுவே இவரது ஆன்ம பலமாக அமைந்திருந்தது. நோயினால் வைத்தியசாலையில் இருக்கும் நாட்களில் கூட நற்கருணை ஆண்டவரை உட்கொள்வதற்கான அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொள்ளத் தவறுவதே இல்லை. இறுதி நாட்களில்,ஒரு நாள் மாத்திரம் விழுங்க முடியாத காரணத்தால் அதைத் தவிர்த்துக்கொண்டார். அத்தோடு தானிருந்த பங்குகளில் நற்கருணைப் பெருவிழாவின்போது ஊரைச் சுற்றி நற்கருணைப் பவனியை மேற்கொள்ள ஒழுங்குகளை மேற்கொண்டு வந்தார். முக்கிய சந்திகளில் நற்கருணை பற்றிய இறைவார்த்தை மற்றும் மறையுரைகள் கொண்டதாக இது அமைந்திருந்தது. பங்கிலே நற்கருணைச் சிற்றாலயத்தை உருவாக்கி மக்கள் இப்பக்தியில் வளர்வதற்குக் களம் அமைத்தும் கொடுத்திருந்தார்.

**2. அன்றாடத் திருப்பலி:**
ஒவ்வொருநாளும் திருப்பலி ஒப்புக்கொடுப்பதில் மிகவும் அக்கறையாக இருப்பார். வெளிநாட்டுக்குச் செல்லும்போது கூட திருப்பலிக்கான அனைத்துத் திருப்பொருட்களையும் தன்னோடு எடுத்துச் சென்று பலி நிறைவேற்றுவதில் கருத்தாயிருந்தார்.

**3. தூய ஆவியானவர் மீதான பக்தி:**
தூய ஆவியானவர் மீதான இவரது பக்தி வலுவனாது. தூய ஆவியானவர் பிரார்த்தனையை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்துஇலவசமாகவழங்கினார். நானும் பெற்றுப் பயன்படுத்தி வருவதோடு பிறருக்கும் கொடுத்து வந்தேன்.

**4. மாதா பக்தி:**
தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் ஆண்களுக்கான வார்ட் இடம் மாற்றப்பட்டபோது ஒரு பிரச்சினை எழுந்தது. அங்குள்ள கழிப்பறை இவரது கால் நோவுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. வார்ட்டில் மறித்தால் என்ன செய்வது என்று நான் கேட்க, 'நல்ல ஆண்டவர் அதைப் பார்த்துக்கொள்வார்.' என்றார். இவர் கேட்காமலே இவரது கஷ்டத்தை உணர்ந்த அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்டர் அவரிடம்,'நாங்கள் ஊசி போட்டு விடுவம். நீங்கள் உங்கள் இடத்திலேயே தங்கலாம்' என்றார். நமக்கு அது இனிப்பான செய்தியாகவே இருந்தது. உடனே அவர் தன் பாக்கெற்றிற்குள் கைவைத்துச் செபமாலையை எடுத்து உருட்டிக்கொண்டிருந்தார். மாதாவிற்கு நன்றி கூறிச் செபித்தார் என்று புரிந்து கொண்டேன். மேலும், இவரது இறுதி நாட்களில் பங்கில் மாதா பெருநாள் கொண்டாடப்பட்டபோது தானும் மாதாவோடு இருக்க வேண்டும் என்று விரும்பி அன்று கிளினிக்குக்கூடப் போவதைத் தவிர்த்து அதில் கலந்து கொண்டார். மாதா பெருநாளின் சில நாட்களிலேயே அவரது உடல்நிலை மோசமடைந்து உயிர் துறந்தார். அது ஒரு அமைதியான இறப்பாகவே இருந்தது.அத்தோடு தனது வெளிநாட்டு நண்பர்களின் உதவியோடு செபமாலைகளைப் பெற்றுப் பலருக்கு இலவசமாக வழங்கிச் செபமாலைப் பக்தியை ஊக்குவித்து வந்தார். அத்தோடு ஆர்வம்கொண்ட பங்குத் தந்தையர்களுக்கும் செபமாலைகளைக் கொடுத்து மக்களுக்கு இலவசமாக வழங்கச் செய்து வந்தார். அத்தோடு பத்திமா மாதாவின் படம்போட்டு செபமாலை மறையுண்மைகள் அனைத்தையும் அழகுற அச்சடிப்பித்து மக்களுக்கு இலவசமாக வழங்கி வந்தார்.

**5. ஒப்புரவு அருட்சாதனம்:**
மக்கள் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதன் அவசியத்தை உணர்ந்து வெவ்வேறு காலங்களில் அதற்காகக் குருக்களை ஒழுங்கு செய்வார். நான் எப்போதெல்லாம் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்குக் கேட்டாலும் தனது களையைக் கூடப் பார்க்காது நேரம் ஒதுக்கித் தருவார். நீண்ட காலமாக எனக்கு ஒப்புரவு அருட்சாதனம் அளிப்பதில் இவரே பெரும் பங்காற்றி வந்தார்.

**அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்**

## ஆ. வழிபாட்டு வாழ்வு

**1. அர்த்தமுள்ள வழிபாடு:**
வழிபாடு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதில் கருத்தாயிருப்பார். அதற்கேற்ப வழிபாட்டு ஒழுங்குகளை மேற்கொள்ள அதிக நேரம் செலவழிப்பார். அர்த்தமற்றது என்று கருதுவதை விலக்கிவிடுவதிலும் இவர் பிடிவாதமாக இருப்பார். வழிபாட்டில் பண்பாட்டு மயமாக்கலை தவறாது கடைப்பிடித்து வந்தார்.

**2. இயல்பாகச் செபித்தல்:**
திருப்பலியில் மன்றாட்டுக்களை மக்கள் இயல்பாகச் செபிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார். இதில் பயிற்சிகள் பெற்றதால் சிறுவர்கள்கூட தந்தையோடு கதைப்பது போன்று மன்றாட்டு வேளைகளிலும் செப வழிபாடுகளிலும்செபிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கின்றேன்.

**3. இறைவார்த்தைப் பணி:**
இறைவார்த்தைக்கு இவர் தன் வாழ்வில் முன்னுரிமை கொடுத்தார். திருப்பலி வேளையில் மாத்திரமன்றிச் சொந்தச் செப வேளையிலும் தவறாது அதை வாசித்துத் தியானிப்பார். இவர் பணியாற்றிய பங்குகளில் இறைமக்கள் ஆலயம் வரும்போது நற்செய்தி அல்லது வேதாகமத்தோடு வருவதைக் காணலாம். இலவசமாக நற்செய்தி அல்லது வேதாகமம் வாங்கிக் கொடுப்பது, வாசக மட்டைகளை வாங்கிக் கொடுப்பது போன்றவற்றை இவர் விரும்பி மேற்கொண்டார்.

**4. குடும்பப் பக்தி:**
குடும்பம் குடும்பமாக வந்து நற்கருணை ஆண்டவரோடு உறவாடுமாறு பங்கு மக்களை ஊக்குவித்து வந்தார்.

**5. இறைத்தியான வழிபாடுகள்:**
இவற்றை ஒழுங்கு பண்ணி நடாத்துவதில் பெரிதும் அக்கறை காட்டி வந்ததோடு தானும் அதில் பங்கு கொள்வார். குறிப்பாக அருட்தந்தை போல் றொபின்சன் அடிகளாரின் வழிபாடுகளை ஒழுங்கு செய்வது இவரது வழக்கமாக இருந்தது.

## இ. இரக்கச் செயல்கள்

**1. ஏழைகள் மீது இரக்கம்:**
இது இவரது ஆளுமையில் மேலோங்கிய பண்பாக விளங்கியது. பிறரின் தேவையறிந்து அவர்கள் கேட்காமலே முன்வந்து உதவிசெய்பவர் இவர். ஏழைகளின் பசி போக்குதல், கல்விக்குப் பங்களிப்புச் செய்தல், பாடசாலை உபகரணங்கள் வாங்கிக் கொடுத்தல், வீடுகள் கட்டிக்கொடுத்தல் போன்ற பல இரக்கச் செயல்களைச் செய்து வந்துள்ளார். ஏழைகளுக்கு இலவசமாக ஆடைகள் வழங்குதையும் முக்கியமான பணியாகக் கொண்டிருந்தார். யுத்த காலத்தில் மக்களின் கஷ்டத்தை உணர்ந்து உணவு சமைத்துக் கொடுப்பதை தவறாது செய்து வந்தார். அதையும் பங்கு மக்களே ஒன்று சேர்ந்து சமைத்து உண்பதற்கு ஊக்குவித்து உறவை வளர்க்க வழிசமைத்தார். கிறிஸ்மஸ் நாளில் எவரும் பசியோடு இருக்கக்கூடாது என்பதற்காக மிகவும் வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவோ, பணமோ கொடுப்பது இவரது வழக்கமாக இருந்து வந்தது. 'கேளுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்ற இயேசுவின் வார்த்தையை நம்பி ஏழைகளுக்கு உதவிசெய்வதற்காக பொருத்தமானவர்களிடம் உதவி கோரத் தயங்கவே மாட்டார். பலர் நல்மனதோடு தாராளமாக உதவியும் செய்தனர். மேலும், 'வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும் என்ற இயேசுவின் அறிவுறுத்தலை இவர் முழுமையாகக் கடைப்பிடித்து வந்தார். தான் செய்தவற்றை வேறு எவருக்கும் கூறவே மாட்டார். பயனாளிகள் கூறும்போது மாத்திரமே இவர் ஏழைகளுக்கு என்னென்ன செய்தார் என்பதை அறிய முடியும்.

**2. குடிநீர்க் கிணறுகள் வெட்டிக் கொடுத்தல்:**
குடிநீர் வசதியில்லாத பல பங்குகளில் கிணறுகள் வெட்டிக் கொடுப்பதில் ஆர்வமாயிருந்தார். இதற்கும் தனது நண்பர்களிடமே உதவிபெறுவார். அனலை தீவு மக்களும் கடற்படையினரும் இவர் கட்டிக்கொடுத்த நல்ல தண்ணிக் கிணற்றாலேயே தாகம் தணித்து வருகின்றனர்.

**3. புற்றுநோயாளரில் அக்கறை:**
இவர் தனக்குப் புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னரே புற்றுநோயாளருக்கு நிதி உதவி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவருக்குப் புற்று நோய் தொடங்குவதற்கு இரு வருடங்களுக்கு முன்னரே தெல்லிப்பழை புற்றுநோய் வாட்டில் நாலு இலட்சம் ரூபா பெறுமதியான கண்ணாடியாலான இரண்டு அறைகள் கட்டிக் கொடுத்திருந்தார். இதற்கு இவரது குடும்ப அங்கத்தவர்களே பங்களிப்புச் செய்திருந்தனர். இவரது இறுதிநாட்களில் அதில் ஒன்றிலேயே உயிர்துறந்தார். வைத்தியசாலையில் நோயுற்று இருந்த நாட்களில் கூடத் தன் உதவி செய்யும் பழக்கத்தைக் கைவிடவில்லை. சக நோயாளருடன் சென்று கதைத்து அவர்களுக்கு ஆறுதலாக இருந்தார். அந்த வாட்டில் நோயாளர்களுக்கு வேண்டிய கிளினிக் கொப்பிகளை அச்சடித்து இலவசமாகக் கொடுத்தார். வைத்தியசாலையில் உள்ள வைத்தியர், தாதியர், சக நோயாளர் போன்று அனைவருடனும் நல்லுறவு பேணி வந்தார்.

**நீத்தார் நயப்புரை**

## ஈ. ஆளுமைப் பண்புகள்

**1. துன்பங்களைத் தாங்கி வாழ்தல்:**
தனது எந்தக் கவலையோ துன்பங்களோ எதைப்பற்றியாயினும் நற்கருணை ஆண்டவரோடு பகிர்ந்து கொள்வாரே தவிர வேறு எவருடனும் அவை பற்றிப் பேசுவதே கிடையாது. இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மாத்திரம் மருந்து ஏத்துவதற்காகக் குத்திய ஊசிகளால் புண்ணாகிப் போன தன் கரங்களை என்னிடம் காட்டினார்.

**2. எளிமை:**
பங்குமனை பெரும் வசதிகள் கொண்டதாக இருக்கவேண்டும் என்று கருதி வாழ்ந்ததே கிடையாது. வசதிகள் குறைந்த பங்குமனையிலும் திருப்தியோடு வாழும் மனப்பாங்கு இவரில் பெரிதும் காணப்பட்டது. இவர் தனக்கெனச் செலவு செய்வது என்றால் அது சத்துணவுக்காகவே. தனது உடைகளைக்கூடப் பழசாகும்வரை பாவிப்பார். தனது வாகனத்திற்குக்கூட பெரும் செலவு செய்வதைத் தவிர்த்தே வந்தார்.

**3. கனிவாகப் பேசுதல்:**
எவருடனும் கனிவாகவே பேசுவார். இது இவரது நற்பண்புகளில் முன்னிடம் வகித்து வந்தது. எவருடனும் நல்லுறவு பேணுவது இவர் வாழ்வில் முன்னுரிமை பெற்றிருந்தது. எவரது மனதையும் புண்படுத்துவதைத் தவிர்ப் பதில் கவனமாக இருப்பார். எவரிடமாவது உதவி கோரும்போது கூட அவர்களைக் கஷ்டப்படுத்தி விட்டேனோ என்று கலங்குவார்.

**4. நன்றி உணர்வு:**
தனக்கு நன்மைகள் செய்தோருக்கு நன்றி காட்டுவது இவரது உயர்ந்த ஆன்மீகப் பண்புகளில் முக்கியமானதாக விளங்கியது. இவ்வாறு நன்றிகாட்ட அவர் தவறுவதே இல்லை. உதவி பெற்றவர்கள் நிதி வழங்கி உதவியவர்களுக்கு நன்றி காட்ட வேண்டும் என்பதில் கருத்தாயிருப்பார்.

**5. நட்புக்கு இலக்கணம்:**
இவர் நட்பைப் பேணி வளர்ப்பதில் தனித்துவமான சிறப்பாற்றலைக் கொண்டிருந்தார். ஆபத்தில் உதவும் நல்ல நண்பனாகவே இவர் இறுதிவரை வாழ்ந்து வந்தார். தனக்கு என்ன துன்பம் வந்தாலும் நண்பர்களைக் கைவிடாதவர் இவர். இவர் தன் வாழ்வில் சேகரித்து வைத்திருந்தது நல்ல நண்பர்களையே என்பது உண்மை. தன்னோடு றோமாபுரியில் கற்ற குருக்களோடு நீண்டகாலமாக நல்லுறவு பேணி வந்தார். அத்தோடு காலத்திற்குக் காலம் அவர்கள் அனைவரது ஒன்றுகூடலை ஒழுங்கு செய்வதில் இவரே தலைமை தாங்கிநடத்தினார். நண்பர்களைச்சென்று சந்தித்தல், பல்வேறு வகையில் அவர்களோடு தொடர்பு கொள்ளுதல், அவர்களோடு ஒன்றாக விருந்துண்ணல், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் என்பவற்றைத் தொடர்ந்து பேணி வந்தார். நண்பர்களை அவர்களது குறைகளோடும் ஏற்றுக்கொள்வார். அவர்களின் குறைகளையெல்லாம் சகித்துக்கொள்வார். எவரைப்பற்றியும் எவ்வித குறையும் கூறமாட்டார்.

**6. குருக்களோடு நல்லுறவு:**
வெவ்வேறு வயதுக் குருக்களுடனும் இலாவகமாகப் பழகும் ஆற்றலையும் இவர் கொண்டிருந்தார். குறிப்பாக ஒதுங்கி வாழ்ந்த குருக்களைத் தேடிச் சென்று உதவுபவராகவும் விளங்கினார். குருத்துவ வாழ்வைத் தொடர முடியாதவர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்கள் தம் புது வாழ்வைத் தொடங்குவதற்கும் பங்களிப்புச் செய்வதோடு தொடர்ந்தும் முன்னாள் குருக்களோடு நல்லுறவைப் பேணி வந்துள்ளார்.

*(தொடர்ச்சி 11ம் பக்.)*

## இரக்கத்தின் உருவாக...

(6ம் பக்கத் தொடர்ச்சி..)

**உ. ஆளுமைத் திறன்கள்**

**1. சிறந்த குருத்துவ உருவாக்குநர்:**

புனித மடுத்தீனார் குருமடத்தில் இவர் அதிபராக இருந்த காலத்தில் இவர் அளித்த பயிற்சி தனித்துவமானது என்பது இவரிடம் பயிற்சி பெற்ற குருக்களின் கருத்தாகும். இவரிடம் பயிற்சி பெற்ற மன்னார் மற்றும் யாழ்ப்பாண மறை மாவட்டக் குருக்கள் இவரோடு இறுதிவரை நல்ல நண்பர்கள் போன்றே பழகி வந்தனர். இவரைத் தேடித்தேடி வந்துள்ளனர். இவர் குருக்களின் உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தின் வளர்ச்சிக்காக கணிசமான நிதிப் பங்களிப்புச் செய்திருந்தார்.

**2. சிறந்த ஆன்மீக இயக்குநர்:**

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஆன்மீக இயக்குநராக இருந்த காலத்தில் கல்வி கற்று வந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது எந்தப் பிரச்சினையையும் மனம் விட்டுப் பேசும் அளவிற்கு அவர்கள் இலகுவாக அணுகக்கூடிய நல்ல வழிகாட்டியாக விளங்கினார். மாணவர்கள் ஒவ்வொருவரது வீடுகளுக்கும் சென்று அவர்களது குடும்ப நிலையை அறிந்து உதவுவதோடு அவர்களது பெற்றோருடனும் நல்லுறவு பேணி வந்தார். இக்காலத்தில் பிரிந்த சபையினர் மற்றும் இந்து சகோதரர்களோடும் நட்போடு பழகி வந்தார்.

**3. பொதுநிலையினர் பங்காளி:**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சிந்தனையை ஒட்டி திரு அவையில் பொது நிலையினரின் பொறுப்புகளையும் பங்களிப்பையும் வலியுறுத்தி ஊக்குவித்து வந்தார்.

**4. எழுத்தாளர்:**

இவர் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக விளங்கியபோது சமூகநலன், திருச்சபை நலன் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் தலையங்கங்கள் எழுதியதோடு பொருத்தமான ஆக்கங்களைத் தெரிவு செய்து பிரசுரிப்பதிலும் கவனம் செலுத்தினார். இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்தார். நான் எழுத்தாளனாக உருவாகுவதில் இவரது ஊக்குவிப்பும் வாய்ப்பளிப்பும் பெரிதும் உதவியதை நன்றியோடு நினைக்கின்றேன். இவர் கிறிஸ்தவ வாழ்வு தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு விநியோகித்து வந்தார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகள் பற்றிய தனது முனைவர் பட்ட ஆய்வை ஆங்கில நூலாக வெளியிட்டு யாழ்த் திருச்சபை வரலாற்றுக்கு முக்கிய பங்களிப்பு வழங்கினார். அத்தோடு சொந்த ஆக்கமான 'பாதை தெரியவில்லையே, இறைவா' (2000) என்ற கட்டுரை மற்றும் கவிதைகள் கொண்ட நூலையும் வெளியிட்டிருந்தார்.

**5. வாசிப்பை ஊக்குவிப்பவர்:**

தோழன், மறையருவி, விவிலிய விருந்து போன்ற சஞ்சிகைகளை இந்தியாவிலிருந்து பெற்று குருக்களும் பொதுநிலையினரும் பயனடையச் செய்தமை இவரது ஒரு முக்கிய பங்களிப்பாகும்.

இவர் தொடர்ச்சியாக வாசிப்பவராக விளங்கியமை இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்க வேண்டும். அறிவுத்தேடல் இவரில் ஒரு அடங்காப் பசியாகவே இருந்தது. உலகில் சிறந்த திரைப்படங்களை விரும்பி வந்து பார்ப்பதில் மகிழ்ச்சி கண்டார். இவர் தான் சேகரித்த நூல்களை பிரான்சிஸ் சவேரியார் குருமடம் மற்றும் தொடர்பக நூலகம் போன்றவற்றிற்கு அன்பளிப்புச் செய்ய விரும்பியிருந்தார்.

**6. கட்டிடக் கலைஞர்:**

இவர் தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கியே கட்டட அமைப்பை மேற்கொண்டு வந்தார். யாழ்பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகமாகிய நல்லாயன் நிலையம் இவரது கைவண்ணத்தில் உருவாகிய அழகிய கட்டடமாகும். குறிப்பாக அங்குள்ள சிற்றாலயம் செபிக்கத் தூண்டும் தன்மையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே புனித மடுத்தீனார் குருமடத்தில் மாடிக்கட்டடம் ஒன்றை அழகுற அமைத்துக் கொடுத்ததால் இன்றும் பல முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. நல்லூர் ஆசீர்வாதப்பர் கோயில் பொது மண்டபம், கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் பங்கில் பெரியபொதுமண்டபம்போன்றவற்றைத்தனது சொந்த முயற்சியால் நண்பர்களிடம் உதவி பெற்றுக் கட்டி முடித்துக் கொடுத்திருந்தார். அவ்வாறே நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் மணிக்கோபுரம் கட்டி வெளிநாட்டிலிருந்து பெற்ற மணியை அதில் ஸ்தாபித்தார்.

**7. சிறந்த நிர்வாகி:**

புனித யோசப் அச்சகத்தை நவீனமயமாக்கியமை இவரது தனித்துவமான பங்களிப்புகளில் ஒன்று. பொருத்தமான நிர்வாகிகளை நியமித்து நடாத்தி வந்தார். கனிவோடு பேசி நிர்வகிக்கும் திறனும் பணியாட்களில் உண்மையான அக்கறை காட்டுவதும் இவரில் மேலோங்கிக் காணப்பட்டன. எந்தப் பணியைக் கொடுத்தாலும் அதைச் சிறப்புறச் செய்து முடிப்பது இவரது சிறந்த ஆளுமைப் பண்பாகும்.

●




# என் கேள்விக்கென்ன பதில்

*(மேரி, யாழ்ப்பாணம்)*

**கே: அதிகாரத்தில் இருந்து அதிகம் துள்ளுகிறவர்களுக்கு என்ன நடந்தேறும் என்பதற்கு இலங்கையின் ஆட்சியாளர்களை உதாரணங்களாகக் கொள்ளலாமா?**

**ப:** நிச்சயமாக மேரி அளவுக்கு மீறி ஆடுபவர்களைக் காலம் உரிய நேரத்தில் கட்டாயம் திருத்தும். வாழ்க்கை என்னவென்று வலிகளால் உணர்த்தும்! என்ற கௌதம புத்தரின் வார்த்தைகள் அதிகாரத்தில் இருந்து அதிகம் துள்ளுகின்றவர்களுக்கு என்னாகும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: 'அறகலய' போராட்டத்திற்குப் பின்னால் யார் நிற்கின்றார்கள்?**

**ப:** ஆனந்தன், 'அறகலய' போராட்டத்திற்கு யார் பின்னால் நின்றால் என்ன யார் முன்னால் நின்றால் என்ன? அது மக்கள் முன்னெடுத்த தன்னெழிச்சிப் போராட்டம். "மக்கள் என்று தாம் வாழ இனி வழியில்லை என்று உணர்கின்றார்களோ அன்று புரட்சி வெடிக்கும். அந்த மக்கள் பிரளயத்திற்கு முன்னால் அதிகார வர்க்கம் சிதறிப்போகும்" என்ற லெனினின் சிந்தனை மக்கள் போராட்டத்தின், புரட்சியின் தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

**அருட்பணி செ. அன்புராசா**

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே : "திருமணம் ஒரு விசித்திரச் சாவி! அது, சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து காட்டிய வேகத்திலேயே சுதந்திரத்தின் கதவுகளை இழுத்துப் பூட்டுகின்றது" என்ற கூற்றைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** அன்ரன்! இச்சாவியைப் பற்றிப் பல வற்றைக் கூறலாம். இச்சாவி, பிடிவாதமான சாவியாக இருந்தால் பிழைத்துப் போய்விடும். புரிந்துணர்வுள்ள சாவியாக இருந்தால் புதுப்பொலிவு பெறும் என்றும் இவ்விசித்திர சாவியைப் பார்க்கலாம்.

*(நாதன், யாழ்ப்பாணம்)*

**கே: உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு கதைக்காமல் ஊகங்களை வைத்துக் கொண்டு தானே பலர் இன்று பலவற்றைப் பற்றியும் பேசிக்கொள்கின்றார்கள்! உங்கள் கருத்து என்ன?**

**ப:** நாதன்! உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொள்ளாமல் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டால் உண்மை நிலைமை அடிபட்டுப் போய்விடும்.

"உன்னுடையது இல்லையென்றால் எடுக்காதே!
சரியானது இல்லையென்றால், செய்யாதே! உண்மை இல்லை யென்றால், சொல்லாதே!
உனக்குத் தெரியவில்லையென்றால் வாயை மூடிக்கொண்டிரு"

என்ற யப்பானியப் பழமொழி உங்கள் கேள்விக்குப் பதிலாக அமையும்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

## நெஞ்சைவிட்டகலா நினைவுகள்

### 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 23 . 09 . 1942
விண்ணில் 23 . 07 . 2022

**லோறன்ஸ் சிங்கராயர்**

### 2ம் மாத நினைவஞ்சலி



மண்ணில் 16 . 10 . 1949
விண்ணில் 20 . 06 . 2022

**சிங்கராயர் மாகிறேற்**

*"தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் என்னிடம் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிட மாட்டேன்" (யோ. 6:37 - 38)*

மனங்களில் நிதம் வாழும் மகத்தான மாமனிதர்களாக, எங்கள் குடும்பத்தின் ஒளிச் சுடர்களாகப் பாசத்தின் உறைவிடமாக, நற்குணத்தின் சிகரங்களாக, இறையருளில் அன்புருவாக, எங்கள் வாழ்வின் இன்பத்திலும், துன்பத்திலும் மெழுகாய் உருகி எம்மை வாழ வைத்தீர்கள். உங்கள் கள்ளமற்ற புன்சிரிப்பைக் காணாது வாடி நிற்கின்றோம், ஏங்கித் தவிக்கின்றோம்.

**உங்கள் வாழ்வு நித்திய வாழ்வாக அமைதியுடன் உறங்கி,**
**இறையருளில் இன்புற கனத்த இதயத்துடன் வாய்விட்டுக் கதறி இறைவனை வேண்டுகிறோம்.**

புலோப்பளை கிழக்கு,
பளை

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்

## சிந்திக்கச் சில வரிகள்

◆ "காலம் கடந்த பின்பு ஞானம் பிறக்கிறது" என்று கூறுகின்றார்கள். ஆனால் ஞானம் பிறந்த பின்பும் காலங்கள் கடந்து கொண்டுதான் இருக்கிறது.

◆ ஏமாற்றம் என்பது நிரந்தரமில்லாத ஒன்று. மாற்றம் என்பது நிச்சயமாக நடந்தே தீரவேண்டியதொன்று.

◆ மீள் எழுச்சி என்பது பதுக்கலும், சுரண்டலும், ஏமாற்றுக்களும் அல்ல, உண்மையான தூய்மையான ஒரு வாழ்வை நோக்கி நகர்வதே மீள் எழுச்சியாகும்.

யோ.கலிஸ்ரா
சுன்னாகம்.

## கைநழுவும் கலாசாரம்

காலம் காலமாக எம்மவர் காத்து வந்த
பொக்கிஷமதை எம் கலியுகத்தின் மைந்தர் -
வாள் கொண்டு நாசம் செய்தனரே

இராப்பகலாய் கண்விழித்துப் பாடுபட்டுச் சிறுகச்
சேர்த்த நன் முத்துக்கள் மாலையாகும்
முன்னரே - கொடும் சேற்றில் வீசப்பட்டனரே

அல்லும் பகலும் அரும் பாடுபட்டு இரக்கம்,
கருணை, மன்னிப்பு என்னும் கற்களால்
கட்டப்பட்ட - பண்பாட்டு பாரம்பரியக் கோபுரம்
பழிவாங்கும் மனங்கொண்ட கயவர்களால்
உருக்குலைந்து பொலிவிழந்து போனதுவே

பட்டாடை கட்டி நயமுற நடையயின்ற
நங்கையர்கள் ரொப்பும் ரைற்றும் குட்டை
முடியும் அழகு நிலையம்தனில் - தவம்
கிடப்பவர் ஒரு புறமென்றால், காதில்
மின்னும் கம்மலும் வாரிக்கட்டிய கூந்தலும்,
வர்ணம் தீட்டிய கேசமுடன் இன்றைய எம்
காளையர்களின் கோலம் - நம்மைப் பிடித்த
தோஷமிது தீராதோ! நாசமது மாறாதோ!
பள்ளி செல்லும் எம்மாணவர்கள் பாடத்தோடு
பண்பையும் கற்க மறந்தனரே! கூடி விளை
யாடி பகிர்ந்துண்டு மகிழும் பள்ளிப் பருவம்
தனில் - தனித்திருந்து மடிக் கணனிக்குள்
மனமதனை அலையவிட்டு தனித்தீவுகளாக
உயர்ந்த மூங்கில்களாக அரிக்கப்பட்ட
ஓங்கில்களாக உறைந்து விட்டனரே
என்ன! இது எம் தலைவிதியோ!

போதை எனும் மாய அரக்கனின் வர்ண
உருவமதைக் கண்டுகொள்ளும் திறனற்ற
விடலைப் பிஞ்சுகள் விளக்கை நோக்கி வரும்
விட்டில்போல - போதையை பேரின்பமாக
எண்ணித் தொலைத்தனரே விடலைப் பருவமதை

அன்னை பிதா ஆசான் உபதேசமது
வேம்பாகக் கசக்க ஆருயிர் நண்பர்களின்
அறிவுரைகள் வேதவாக்காக நல்வழிப்பட்ட
வருமுண்டு நாசவழிதனில் சென்றவருமுண்டு

ஒருவருக்கு ஒருத்தி என்ற மரபு மாறி
மனம் ஒத்தால் வாழ்வு - இல்லையேல்
உடன் விவாகரத்து! பெற்றவர் மனம்
கல்லானதால் புகுந்தனர் சிறுவர்கள் சிறுவர்
இல்லமதனில் என்ன கொடுமையிது!
காலம் செய்த கோலமிது

இயேசுவின் வழியில் படைத்தவனை
படைப்புக்கள் சென்றடைவதை மறந்து
மனத்துக்கு கடிவாளமிட மறுத்து
மதமென்னும் மோகத்தில் மூழ்கி
மனிதத்தை மிதித்து நசுக்கும் மானிடர்
தம் சதிகார வேலையில் கொக்கரித்துக்
களிப்புறுகின்றனரே எப்போது விடியும்?
காரிருளைக் கிழித்துக் கொண்டு ஆதவன்
வரவுகாண மனமானது ஏங்குகின்றது
கண்முன்னே கைநழுவும் கலாசாரம் கண்டு
கண்கள் ஒளியிழக்கின்றன
இதயத்தை இருள் கௌவுகின்றது
மூச்சுமுட்டுகின்றது இறைவனே
காத்திடுவீர் எம் கலாசாரமதை...

அருட்சகோதரி
ஞா.இ.சுபாஜினி (தி.கு)
முழங்காவில்

# சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத் திருவிழா





சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 07ம் திகதி நடைபெற்றது. 29ம் திகதி வெள்ளிக்கிழமை புனிதரின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த நாள் வழிபாடுகள் நடைபெற்று வந்தன. 06ம் திகதி நற்கருணை விழாவும் 7ஆம் திகதி திருவிழாவும் நடைபெற்றன. யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகள் திருநாள் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

இத் திருவிழாவில் அயற் பங்குகளிலிருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டதுடன் திருநாள் ஒழுங்குகள் அனைத்தும் பங்குத்தந்தை அருட்திரு ஞானரூபன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# குமுழமுனையில் இளையோர் சிறப்பு தினம்



குமுழமுனை புனித யாகப்பர் ஆலய இளையோர் மன்றத்தினர் தமது பாதுகாவலர் புனித மரிய வியான்னி அவர்களின் நினைவு தினத்தில் முன்னெடுத்த இளையோர் தின சிறப்பு நிகழ்வு கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்திரு நிதர்சன் அடிகளின் தலைமையில் புனிதரின் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியில் இளையோர்கள் ஒன்றிணைந்து தமது அழைத்தல் வாக்குறுதியைப் புதுப்பித்துக் கொண்டார்கள். திருப்பலியில் ஆலய மக்கள் அயல் ஆலய இளையோர் மன்றத்தினர் கலந்து சிறப்பித்துப் பங்குத்தந்தையர்களின் பாதுகாவலரான புனித மரிய வியான்னியிடம் குருக்களுக்காக செபித்து நின்றனர். திருப்பலி நிறைவில் ஆலய முன்றலில் இத்தினத்தின் நினைவாக புனித மரியன்னையின் திருச்சுருபம் திறந்து வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

# வன்னி கரித்தாஸ் கியுடெக் நிறுவனத்தினால் குடிநீர் சுத்திகரிப்புக் கருவி வழங்கல்



சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனம் முன்னெடுத்த கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கான குடிநீர் சுத்திகரிப்பு கருவி பொருத்தும் நிகழ்வு கடந்த 02ஆம் திகதி பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

வன்னி கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு செபஜீவன் அடிகளின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி வசந்தா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரோபண இளையோர் இல்ல இயக்குனர் அருட்திரு சசிகரன் அடிகள் கலந்து சுத்திகரிப்பு கருவியை மாணவர்களின் பாவனைக்காகத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வு இப்பாடசாலையில் நீண்ட காலமாக நிலவிவந்த குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தையுமாகிய அருட்தந்தை A.J. யாவிஸ் அடிகளின் அன்புத்தந்தை பிலிப் அருளானந்தம் அவர்கள் கடந்த 16 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவதுடன், அவரின் இழப்பில் துயர் கொண்டுள்ள அருட்தந்தை, பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினால் உறவுப்பால நிகழ்வு



சக வாழ்வையும் சமாதானத்தையும் மேம்படுத்தி இனம் மதம் மொழி கடந்து அனைவரையும் ஒன்றிணைக்கும் முகமாக கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட உறவுப்பால நிகழ்வு இம்மாதம் 12, 13 ஆம் திகதிகளில் உருத்திரபுரம் ஆரோபண சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

அனுராதபுரம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கரித்தாஸ் நிறுவனத்தினால் அனுராதபுர சமூகமட்டக் குழு அங்கத்தவர்களும் கரித்தாஸ் வன்னி கியூடெக் சமூகமட்டக் குழுவினரும் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

கலை நிகழ்வுகள் பாரம்பரிய விளையாட்டுக்கள் அனுபவப் பகிர்வுகளை உள்ளடக்கிய இந்நிகழ்வில் ஒன்றாக இணைந்து, உணவு சமைத்து, தோழமை விருந்திலும் ஆர்வத்துடன் இவர்கள் பங்குகொண்டனர்.

# புனித மரியன்னை பேராலயத்தில் முதல் நன்மை அருட்சாதனம்



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது.

அருட்திரு எஸ். எயின்சிலி றொஷான் அடிகள் தலைமையில் நடைபெற்ற அருட்சாதனத் திருப்பலியில் 95 மாணவர்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

# பாசையூர்ப் பங்கில் முதல் நன்மை அருட்சாதனம்



பாசையூர்ப் பங்கிலுள்ள பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கடந்த வாரம் நடைபெற்றது.

அருட்திரு ஜஸ்ரின் அடிகளின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 45 சிறார்களும் வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு ஜீவேந்திரா போல் அடிகளின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 03 சிறார்களும் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

# சலேசியன் துறவற சபையின் 150ஆவது ஆண்டு



உரும்பிராயப் பங்கில் பணியாற்றிவரும் சலேசியன் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் தமது சபை உலகில் ஆரம்பிக்கப்பட்டதன் 150ஆவது ஆண்டு நிறைவு தினத்தை நினைவுகூர்ந்து முன்னெடுத்த சிறப்பு நிகழ்வு கடந்த 5ஆம் திகதி உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்திரு அருட்செல்வன் அடிகள் தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அந்நாள் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.